E.P.No. 11/2022 நாள்: 09.10.2025

ம.சா.1 திரு. அண்ணாமலை

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5) வழக்கு சொத்தானது எனக்கு பூர்வீக சொத்து என்றால் சரியல்ல, கிரையம் பெற்றது. அந்த சொத்தை தான் சூரியமூர்த்திக்கு கிரையம் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்ற சொத்தில் குறிப்பிட்ட அளவு என் வசம் வைத்துக் கொண்டுதான் சூரியமூர்த்திக்கு கிரையம் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எதிர்புறம் வடக்கில் பேரூராட்சிக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரியல்ல. 5 ம் நம்பர் பிளாட்டிக்கு நேர் வடக்கில் உள்ள எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் விசாலாட்சி நகர், மக்கள் குடிநீர் வசதிக்காக மேல் நிலை நீர்தேக்க தொட்டி கட்டுவதற்காக இடம் ஒதுக்கி இருந்தேன் ஆனால் மேற்படி தொட்டி எதுவும் கட்டவில்லை.

6) பொது மக்கள் செல்லக்கூடிய பாதையாக இருந்தால் ஒருவருடைய பட்டா நிலமாக இருந்தாலும் அதை நிலவியல் பாதையாக கருதவேண்டும் என்றால் சரியல்ல. மெர்சியா நகர் மற்றும் விசாலாட்சி நகருக்கு செல்லக்கூடிய மக்கள் தாவா சொத்து வழியாகத்தான் சென்று வருகிறார்கள் அதனால் சாலை அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே வாய்க்கால் இருந்தது. தற்போது தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து சிமெண்டு குழாய் அமைத்து பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த பாதையானது பொது மக்கள் பல ஆண்டுகளாக வாகனத்திலும், நடைபாதையாகவும் பயன்படுத்தி வந்ததால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி : இல்லை.

S.d/ Annamalai

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.10.09 19:27:50 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU